மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2019ம் வருடம் ஜூலை மாதம் 30 ஆம் நாள் செவ்வாய் கிழமை

**I.A . No. 369/2019**
**in**

**O.S. No. 63/2019**

R. குப்பையாண்டி

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

K. கருப்புசாமி

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 09.07.2019ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.காந்திராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு.M.R. கோடீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 25.07.2019ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

## உத்தரவு

இம்மனு, உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன்படி, அசல் வழக்கின் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து அத்துமால் செய்து தாவா சொத்தின் ஆக்கிரமிப்பு தொடர்பான மற்றும் Physical feature யை கண்டறிந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கமும் அதன் பேரிலான மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதமும்:

சின்னஇலந்தைக்குளம் கிராமம், சர்வே எண். 80/6Aல் கண்ட 21செண்ட் நிலம் மனுதாரர்/வாதியின் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண். 80/6Aல் கண்ட 21 செண்டில் மனுதாரர்/வாதியின் தாத்தாவான குப்பையாண்டி மணியம் என்பவர் கடந்த 27.07.1939ம் தேதியில் 21/2 செண்ட் நிலத்தை ஒரு சாமி மணியம் மற்றும் அவரது

வாரிசுகளிடமிருந்தும், பின்னர் கடந்த 15.09.1939ம் தேதி 2 1/2 செண்ட் நிலத்தை வீரணன் மணியம் மற்றும் முத்துமணி மணியம் என்பவர்களிடமிருந்து, கிரையம் பெற்றும், அதன் பின்னர் குப்பையாண்டி மணியத்தின் மகனும் மனுதாரர்/வாதியின் தந்தையுமான ராமசாமி மணியம் என்பவர், ராமு மணியம் மற்றும் சக்திவேல் மணியம் என்பவர்களிடமிருந்து 4 செண்ட் நிலத்தையும் கிரையம் பெற்று, ஆக சர்வே எண். 80/6Aல் கண்ட 21 செண்ட்ல் கிழக்கு புறமாக 9 செண்ட் நிலமானது குப்பையாண்டி மணியத்திற்கும் அவரது வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்தில் இருந்து வந்துள்ளது என்றும், யுடிஆர் ன் போது சர்வே எண். 80/6A என்பது 80/6A2 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே 80/6Aயும் 80/6A2ம் ஒரே சர்வே எண். என்றும், சர்வே எண். 80/6A2ல் கண்ட 21 செண்ட்டில் 9 செண்ட் போக மீதமுள்ள 15 செண்ட் மனுதாரர்/வாதியின் சில பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டு, குப்பையாண்டி மணியம் மகன் ராமசாமி, அவரது வாரிசுகள் மற்றும் பங்காளிகளுடன் கூட்டாக சர்வே எண். 80/6A2ல் பட்டா எண். 482 ஏற்பட்டுள்ளது என்றும், அதில் 6 செண்டிற்கு மட்டும் தனியாக பங்காளிகள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், சர்வே எண். 80/6A2க்கு கிழக்கு புறமாக எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றும், அதில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வீடு கட்ட முயற்சிக்கும் போது, தாவா இடத்தை அளந்த பின் வீடு கட்டும்படி மனுதாரர்/வாதி கூறியும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் சர்வே எண். 80/6A2ல் கிழக்குப்பக்கம் தென்வடல் 30 அடியும், கிழமேல் 16 அடி அளவில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டிவருகிறார் என்றும், இது குறித்து மனுதாரர்/வாதியின் சகோதரரின் மகனால் அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எவ்வித அனுபவமும் இல்லை என்றும், எனவே விளம்புகை, தடையுத்திரவு மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றி தரக்கோரி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ராமசாமி மணியத்தின் மற்ற வாரிசுகளுக்காக சேர்த்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதி குறித்து வழக்கறிஞர் ஆணையாளர் நியமனம் மூலமே அடையாளம் காணமுடியும் என்றும், மனுதாரர்/வாதிக்கு சாதகமான வழக்குமூலம் உள்ளது என்றும், இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரர்/வாதிக்கு பாதிப்பு ஏற்படும் என்றும், எனவே, அசல் வழக்கின் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து அத்துமால் செய்து தாவா சொத்தின் ஆக்கிரமிப்பு பகுதி மற்றும் Physical feature யை கண்டறிந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய ஒரு வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு எதிர் உரையின் சுருக்கமும் அதன் பேரிலான எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதமும்:-**

மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும், அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், தாவா சொத்தான சர்வே எண். 80/6ல் மொத்தம் 21 செண்டில் மனுதாரர்/வாதியின் தாத்தா குப்பையாண்டி மணியம் மற்றும் தந்தை ராமசாமி மணியம் இருவரும் 9 செண்ட் நிலம் கிரையம் பெற்றார்கள் என்பதும், மீதமுள்ள 15 செண்ட் நிலம் மற்ற சில பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டு, அதில் 9 செண்ட் நிலம் ராமசாமி மணியத்தின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டு, மற்ற பங்காளிகளின் பெயருடன் இணைந்து வருவாய் அதிகாரிகளால் கிரையப்பத்திரத்தை சரி பார்க்காமல் கூட்டு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதில் 6 செண்ட் நிலத்திற்கு தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், யுடிஆர்ன் போது மேற்படி சர்வே எண். 80/6A2 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சர்வே எண்ணின் கிழக்குபுறம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வீடு கட்ட முற்பட்ட போது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வருவதாகவும், இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாகவும், அதனால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், தற்சமயம் நீதிமன்ற ஆணையாளர் உதவியுடன் ஆக்கிரமிப்பு பகுதியை அளப்பதன் மூலமே அடையாளம் காண முடியும் என்று மனுதாரர்/வாதி தனது மனுவில் கூறியுள்ளவை அனைத்தும் பொய்யானதாகும் என்றும், உண்மையில் கிரையப்பத்திர சொத்திற்கும் தாவா வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், ராமசாமி மணியத்தின் வாரிசுதாரர்களை மனுவில் பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றும், தாவா சொத்தில் மனுதாரர்/வாதி அனுபவம் செய்து வருவதற்கான எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும், பாகப்பிரிவனையில்லா சொத்தில் மற்ற பங்குதாரர்களுக்கு உரிமை இருக்கும் போது தாவா சொத்திற்கு வாதி பரிகாரம் கோர முடியாது என்றும், தாவா வழக்கில் உரிமை மூலத்தை அறிவிக்கவும் மற்றும் செயலுறுத்து நிவாரணம் கோர மனுதாரர்/வாதி தனிப்பட்ட உரிமை இல்லை எனவும் கூட்டுரிமை சொத்தில் தனியாக உரிமை கோர முடியாது என்றும், பட்டா எண். 482ல் உள்ள குப்பையாண்டி மகன் ராமசாமி மணியம் என்பவர் எதிர்மனுதாரரான கருப்பச்சாமி தகப்பனார் பெயர் குப்பையாண்டி என்றும் இவரது உடன்பிறந்த சகோதரர் பெயர் ராமசாமி மணியம் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது தகப்பனார் காலம் முதல் தாவா சொத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்றும், அதன் பின் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அதில் முன் கூரைவீடு பின்னர் ஓட்டு வீடு கட்டி தற்பொழுது காரை வீடு கட்டி சுமார் 35 வருடங்களாக அனுபவம் செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாம் அனுபவித்து வந்த சொந்த இடத்தில் முன்பு குடியிருந்து வந்த ஓட்டுவீட்டை இடித்து புதிதாக அதே இடத்தில் தான் வீடு கட்டி வருகிறார் என்றும், தாவா சொத்தான சின்ன இலந்தைகுளம் கிராமத்தில் சர்வே எண். 80/6A என்பது மீனாட்சி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும், மீனாட்சி அம்மாளின் சர்வே எண். 80/6Aல் உள்ள 21 செண்டை தனது உடன் பங்காளிகளுக்கு வழங்கிவிட்டு, மீனாட்சி அம்மாளின் வாரிசுகள்

பொதும்பு கிராமத்தில் குடியிருந்து வருகின்றனர் என்றும், மீனாட்சி அம்மாள் வழங்கிய தாவா இடத்தில் சட்ட காலத்திற்கு மேலாக சுமார் 35 ஆண்டுகள் எதிர்மனுதாரர்/பிரதிவாதி குடியிருந்து தாவா வீட்டிற்கு வீட்டுவரி, குழாய் வரி ஆகியவை செலுத்தி வருகின்றார் என்றும், மனுதாரர்/வாதி தனது மனு சொத்து விபரத்தில் 1,2 இலக்க சொத்துக்கள் ஒன்றாக காண்பிக்கப்பட்டுள்ளன என்றும், நான்குமால் ஒரே விதமாக உள்ளது என்றும், 3வது இலக்க சொத்தின் நான்குமால் சம்பந்தமில்லாமல் தாவா இடத்திலிருந்து சுமார் 1/2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றும், ஆக தாவா மொத்தமுள்ள 3 இலக்க சொத்துக்களுக்கும் தாவா இடத்திற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றும், சொத்துவிபரத்தில் உள்ள சொத்திற்கும், தற்போதைய பிராது சொத்திற்கும் முற்றிலும் மாறுபட்டுள்ளது என்றும், நான்குமாலிலும் மாறுபாடு காண்பித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், சொத்து விபரத்தின் சர்வே எண். 80/6A என்பது 3 இலக்க சொத்துக்களுக்கும் தற்போதைய பிராதில் உள்ள சொத்து விபரம் முற்றிலும் முரண்பட்டது என்றும், இதனை அடிப்படையாக வைத்து எந்தவித அத்துமால் அளவையும் காணமுடியாது என்றும், கூட்டுபட்டாவில் உள்ள கூட்டு உரிமையாளர்களை வாதி, பிரதிவாதிகளாக சேர்க்காமல் தாவா வழக்கில் எந்த வித உத்தரவும் பெறமுடியாது என்றும், எனவே சட்டத்திற்கு புறம்பாக அடிப்படை ஆதாரம் இல்லாமல் சர்வே எண். 80/6A என்பதனை மாறுதலாக உள்ளதை வைத்து உரிமை கோர முடியாது என்றும் மனுதாரர்/வாதிக்கு உரிமையில்லாத தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து அத்துமால் செய்யமுடியாது என்பதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யும்படி வேண்டப்பட்டது.

**<u>தீர்வு:-</u>**

3) மனுதாரர் /வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

4) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த நிர் வழக்கானது மனுதாரர்/வாதியால் தாவா பிராது சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் தடையாணை பரிகாரம் கோரியும் தாவா சொத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் எற்படுத்தப்பட்ட கட்டிட ஆக்கிரமிப்பை அகற்ற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர்/வாதியின் வாதுரையை மறுப்பதுடன் தாவா சொத்து மீனாட்சி அம்மாளுக்கு பாத்தியப்பட்டு இருந்ததில் அவரிடமிருந்து பிரதிவாதியின் முன்னோர்கள் மற்றும் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், மனுதாரர்/வாதி வழக்கில் அவசியமான கூட்டுரிமையாளர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லையென்றும், சொத்து விபரம் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்திற்கும் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்திற்கும் சம்பந்தமில்லை

என்றும் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதுரைக்கப்பட்டது.

(5) மனுதாரர்/வாதி தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(6) ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் 1939 மற்றும் 1965ம் வருடத்தில் தாவா சொத்தான சர்வே எண். 80/6A2ன் முந்தைய சர்வே எண். 80/6Aல் கட்டுப்பட்ட சொத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்களாகும். ம.சா.ஆ.4 என்பது மனுதாரர்/வாதியின் தந்தை ராமசாமி மணியம் மற்றும் 5 நபர்கள் பெயரில் சர்வே எண். 80/6A2 சொத்திற்கு பட்டா எண். 482ன்படி வழங்கப்பட்ட கணினி பட்டா ஆகும். ம.சா.ஆ.5ன்படி சர்வே எண். 80/6A2 சொத்தின் வரைபாடு தொடர்பானது ஆகும். ம.சா.ஆ.6 சர்வே எண். 80க்கான புலப்பட நகல் ஆகும். ம.சா.ஆ.7 மற்றும் 8 புகார் மனு மற்றும் ஒப்புதல் அட்டையாகும். ம.சா.ஆ.9 மற்றும் 10 மனுதாரர்/வாதியின் தந்தை ராமசாமி மணியம் என்பவரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகும். ம.சா.ஆ.11 வழக்கு சொத்து தொடர்பான புகைப்படம் மற்றும் கணினி நகல் ஆகும்.

7) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் எ.ம.சா.ஆ.1 1385ம் பசலிக்கு (1976ம் வருடம்) மீனாட்சி அம்மாள் பெயரில் வழங்கப்பட்ட சாகுபடி அடங்கல் ஆகவும், எம.சா.ஆ.2 ஆக சர்வே எண். 80/6A2 சொத்திற்கு பட்டா எண். 482ன்படி 6நபர்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவாகவும், எ.ம.சா.ஆ.3 ஆக எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயரில் கதவு எண். 2/154க்குரிய வீட்டு வரி ரசீதும், எம.சா.ஆ.4 ஆக தண்ணீர் கட்டண ரசீதையும், எ.ம.சா.ஆ.5 ஆக மின்கட்டண ரசீதும், எம.சா.ஆ.6 ஆக ராமசாமி குப்பையாண்டி என்பவரின் ஆதார் அடையாள அட்டையும், எம.சா.ஆ.7 ஆக புகைப்படம் மற்றும் சிடியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் மூலம் சர்வே எண். 80/6Aல் கட்டுப்பட்ட சொத்து மனுதாரர்/வாதியின் முன்னோர்களால் பதிவு செய்த கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றது தெரியவருகிறது. ம.சா.ஆ.4 ஆகிய பட்டா எண். 482ன்படி சர்வே எண். 80/6A2க்கு வாதியின் தந்தையும், குப்பையாண்டி என்பவரின் மகனுமாகிய ராமசாமி மணியம் மற்றும் 5 நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மேற்படி பட்டா எண். 482ல் 6வது நபராக குறிப்பிடப்பட்ட ராமசாமி மணியம் என்பவர் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தந்தை குப்பையாண்டி மணியத்தின் சகோதரர் என்பதும் வாதுரைக்கப்பட்டு, அதற்கு ஆதரவாக எ.ம.சா.ஆ.6 ஆதார் அடையாள அட்டை தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. ஆனால் ம.சா,ஆ.9 மற்றும் 10 மேற்படி ராமசாமி மணியம் என்பவரின் வாரிசு மற்றும் இறப்பு சான்றிதழ்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருண்மை முழுமையான சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலான விசாரணையில் தான் தெரியவரும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.1 ஆகிய மீனாட்சி அம்மாள் பெயரிலான 1385ம் பசலிக்குரிய உரிமைமூல ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி மீனாட்சி அம்மாள் என்பவரிடமிருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் முன்னோர்கள் சர்வே எண். 80/6Aயில் கட்டுப்பட்ட சொத்தை உரிமை பெற்றதற்கான ஆவணங்கள் மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் ஏதும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் ம.சா.ஆ.2 என்பது ம.சா.ஆ.4 ஆகிய பட்டா எண். 482 ஆகும். எ.ம.சா.ஆ.3 முதல் 5 வரையிலான வீட்டுவரி, தண்ணீர்வரி, மின்கட்டண வரி ஆகியவை சர்வே எண். 80/6A2ல் கட்டுப்பட்ட சொத்திற்குரியது என்பதற்கு தகுந்த ஆவணங்கள் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேலும் மேற்படி பொருண்மையினை முழுமையான விசாரணையில் தான் தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) மேற்கண்ட இருதரப்பு வாதுரை மற்றும் சான்றாவணங்களின்படி தாவா சொத்து சர்வே எண். 80/6A2ல் கட்டுப்பட்டு அதனை ம.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.2ன்படி இருதரப்பினரும் உரிமை கோருகின்றனர் என்பதும், இருதரப்பினருக்கு பாத்தியமான சொத்துக்கள் அடுத்தடுத்து உள்ளது என்பதும் தெரியவருகிறது. மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பிரச்சனைக்குரிய சொத்தில் கட்டிட வேலை நடைபெற்று வருவதை மறுக்கவில்லை. எனவே சர்வே எண். 80/6A2ல் கட்டுப்பட்ட சொத்தில் வழக்கு தாக்கல் செய்த தேதியில் சொத்தின் நிலையையும் அதில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கட்டிவருகின்ற கட்டுமான பணிகளின் நிலையினையும் உறுதி செய்து கொள்வது வழக்கினை தீர்மானம் செய்வதற்கும் அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் மூலம் வழக்கு சொத்தின் எல்கை மற்றும் தற்போதைய நிலைப்பாடு ஆகியவற்றை அறிக்கையாக பெறுவதில் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) மேலும் ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடம் பொருண்மைகளை உறுதிப்படுத்துவதற்கு மட்டுமே அனுமதிக்கக்கூடியது என்பதும் அதனடிப்படையில் அனுபவத்தை நிர்ணயம் செய்ய இயலாது என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். மேலும் மனுதாரர்/வாதி தரப்பில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி எ.ம.சா.ஆ.2 ஆகிய பட்டாவின் அடிப்படையில்

பல்வேறு உரிமை கோருகிறார் என்றும், ஆனால் பட்டா உரிமை மூலத்திற்குரிய ஆவணமாக கருதஇயலாது என்பதும் அடியிற்கண்ட முன்தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டது.

2003(5) CTC 640 In the High Court of Madras, Lakshmana Gounder (Vs) The Special Deputy Collector (LA), Salem Steel Plant, Salem and others cases,

Evidence Act 1872 – Evidentiary value of Patta – Patta is a record of possession represents a distinct fractional part of lands – Entries in Revenue records are not conclusive but their importance in a case for compensation cannot be denied, until contrary is shown – Presumption of correctness can apply to genuine, not forged or fraudulent entries.

மேலும் ஆணையாளர் நியமனம் தொடர்பாக "*2018(4) TLNJ 564 (civil) ன்படி சட்ட இதழில்* Mohan (vs) Manjula and others *என்ற வழக்கில்* மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால், "***Civil Procedure Code, 1908, Order 26 Rule 9*** *– Dispute regarding common lane- plaintiffs sought declaration that the said lane is common to both the plaintiffs and the defendants filed I.A to appoint an advocate commissioner – District Munsif stated that a prima facie case has been established to show that there is a common lane in the disputed property and therefore, it is necessary to appoint an advocate commissioner to inspect the suit property and further stated that report of the advocate commissioner would be helpful to the court to decide the suit _ It cannot be contented that to collect evidence advocate commissioner appointed - plaintiffs not sought for appointment of advocate commissioner to show who is in possession of the disputed lane – District Munsif court appointed the advocate commissioner to reduce the oral evident – no illegality – C.R.P dismissed" என்று உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.*

11) எனவே தாவா வழக்கு தரப்பினர்களின் சொத்துக்கள் அடுத்தடுத்து உள்ள நிலையிலும், தாவா சொத்தின் அளவீட்டில் தரப்பினர்களிடையே பிரச்சனை இருக்கின்ற நிலையிலும், அதன் உண்மை நிலையை ஆணையாளர் அறிக்கை மூலம் தெளிவுபடுத்திக்கொள்வது வழக்கு தரப்பினர்களிடையேயான பிரச்சனையை அறுதியாக தீர்மானம் செய்வதற்கு அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட பொருண்மை மற்றும் சட்டநிலைப்பாடுகளின்படி இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு N. செல்வராஜ் அவர்களை இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையாளராக இந்நீதிமன்றம் நியமனம் செய்கிறது. அவர் மனுவில் குறிப்பிட்ட தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து அத்துமால் செய்து தாவா சொத்தின் ஆக்கிரமிப்பு பகுதி மற்றும் Physical feature யை கண்டறிந்து அதற்கான வரைபடத்துடன் கூடிய அறிக்கையை இந்நீதிமன்றத்தில்

தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையாளர் ஊதியமாக ரூ.5000/-த்தை மனுதாரர்/வாதி நேரடியாக நீதிமன்ற ஆணையாளரிடம் செலுத்த வேண்டும்.

அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா நாள்: 10.09.2019

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2019ம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர் தரப்பு சாட்சி**: இல்லை

**மனுதாரர் தரப்பு ஆவணங்கள்:**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 27.07.1939ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் |
| ம.சா.ஆ.2 | 15.09.1939ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் |
| ம.சா.ஆ.3 | 19.12.1965ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் |
| ம.சா.ஆ.4 | 15.03.2019ம் தேதியிட்ட பட்டா எண் 482 ன் நகல் |
| ம.சா.ஆ.5 | சர்வே எண். 80/6A2ன் வழிக்காட்டி மதிப்பு |
| ம.சா.ஆ.6 | சர்வே எண். 80க்கான புலப்பட நகல் |
| ம.சா.ஆ.7 | 24.06.2019ம் தேதியிட்ட புகார் மனு |
| ம.சா.ஆ.8 | ஒப்புதல் அட்டை |
| ம.சா.ஆ.9 | ராமசாமி மணியம் என்பவரின் இறப்பு சான்றிதழ் |
| ம.சா.ஆ.10 | ராமசாமி மணியத்தின் வாரிசு சான்றிதழ் |
| ம.சா.ஆ.11 | வழக்கு சொத்து தொடர்பான புகைப்படம் மற்றும் கணினி நகல் ஆகும். |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி**: இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 1385ம் பசலிக்குரிய அடங்கல் |
| எம.சா.ஆ.2 | சர்வே எண். 80/6A2 சொத்திற்கு பட்டா |
| எ.ம.சா.ஆ.3 | கதவு எண். 2/154க்குரிய வீட்டு வரி ரசீது |

எம.சா.ஆ.4 தண்ணீர் கட்டண ரசீது

எ.ம.சா.ஆ.5 மின்கட்டண ரசீது

எம.சா.ஆ.6 ராமசாமி குப்பையாண்டி என்பவரின் ஆதார் அடையாள அட்டை

எம.சா.ஆ.7 தாவா சொத்தின் புகைப்படம் மற்றும் சிடி.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//